

கிறிஸ்துமஸ் கதைகள்

காலின் ஸ்மித்

10 Publishing
a division of 10 of those.com

பதிப்புரிமை © 2025 காலின் ஸ்மித்

முதல் பதிப்பு : ???

இந்தப் படைப்பின் ஆசிரியராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் உரிமையை
காலின் ஸ்மித் அவர்கள் 1988 ஆம் ஆண்டின் பதிப்புரிமை
சட்டத்தின் படி உறுதிப்படுத்தியுள்ளார்

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.
இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியும் மின், இயந்திர, நகலெடுப்பு, பதிவு அல்லது பிற எந்த முறையிலும்
பதிப்புரிமை உரிமையாளரின் முன் அனுமதி இன்றி மீண்டும் வெளியிடவோ, சேமிப்பு அமைப்பில்
வைத்திரைக்கவோ, அல்லது பரிமாறவோ கூடாது.
பரிசுத்த வேதாகமம் – English Standard Version® (ESV®) இலிருந்து
மேற்கோள் எடுக்கப்பட்ட வசனங்கள் © 2001 – Crossway
(ஒரு Good News Publishers வெளியீட்டு அமைச்சகம்)
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் நூலகம் – இந்தப் புத்தகத்திற்கான பதிவு
பிரிட்டிஷ் நூலகத்தில் கிடைக்கிறது.
சர்வதேசத் தர புத்தக எண் (ISBN): 978-1-837280-43-8

வடிவமைப்பு : பீட் பார்ன்ஸ்லி (CreativeHoot.com)
அச்சிடப்பட்டது : Wolgemuth & Wilson இலக்கிய முகமை இணைப்பில்

10Publishing – (10ofthose.com இன் ஒரு பிரிவு)
Unit C, Tomlinson Road, Leyland, PR25 2DY, England

info@10ofthose.com
www.10ofthose.com

1 3 5 7 10 8 6 4 2

உள்ளடக்கம்

காபிரியேலின் கதை - பக் 04

மரியாளின் கதை - பக் 14

யோசேப்பின் கதை - பக் 26

சிமியோனின் கதை - பக் 36

ஏரோதின் கதை - பக் 46





காபிரியேலின் கதை



பரலோகத்திலுள்ள தூதர்கள் அனைவருக்கும் மத்தியிலே, உலகிற்கு இயேசு கிறிஸ்து வரவிருப்பதை அறிவிக்கும் விசேஷித்த சிலாக்கியம் எனக்குக் கொடுக்கப்பட்டது. அங்கே எத்தனை தூதர்கள் இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியாது, ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான் எங்களைப் பற்றிய ஒரு காட்சியைப் பெற்றபோது, பத்து கோடிக்கும் அதிகமான தூதர்களைக் கண்டதாக எழுதினார்; அவர் கண்டது அவ்வளவு மட்டுமே. உண்மையிலேயே, அவர்களை எண்ணுவதை விட எனக்கு வேறே மிகவும் முக்கியமான பணிகள் உள்ளன. ஆனாலும் உலகில் உள்ள மனிதர்களின் எண்ணிக்கைக்கு இணையாக தூதர்கள் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

தூதர்களால் ஈர்க்கப்படும் மனிதர்கள் பொதுவாகக் காரியத்தைத் தவறவிட்டு விடுகிறார்கள். அது என்னவென்றால், நாங்களோ தேவனிடமே ஈர்க்கப்பட்டு கொண்டிருக்கிறோம் என்பதே ஆகும். என் வாழ்க்கையின் மாபெரும் சிலாக்கியம் என்னவென்றால், தேவனுடைய சமூகத்தில் நிற்பதும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மத்தியில் காணப்படும் அன்பையும் மற்றும் அவர் மூலமாக நம் அனைவருக்கும் அந்த அன்பு எவ்வாறு கிடைக்கிறது என்பதை காண்பதுமே ஆகும்.

நான் என் கதையைத் தொடங்குவதற்கு முன், என்னைப் பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வேதாகமத்திலே பெயர் சொல்லி குறிப்பிடப்பட்டிருப்பது இரண்டு தூதர்கள் மட்டுமே என்று உங்களுக்குத் தெரியுமா? ஒருவர், பிரதான தூதனாகிய மீகாவேல், மற்றவர் காபிரியேலாகிய நான். எனக்கு ஒருமுறை அல்ல, மூன்று முறை தேவனுடைய தூது சொல்ல தெரிந்து கொள்ளப்பட்டேன்!

நான் தீர்க்கதரிசியாகிய தானியேலிடம் அனுப்பப்பட்டேன். அவர் ஒரு தரிசனத்தைப் பெற்றிருந்தார், ஆனால் அது அவருக்கு விளங்கவில்லை, அதை அவர் புரிந்துகொள்ள உதவுவதற்காக நான் அனுப்பப்பட்டேன்.

நான் அவருக்குத் தோன்றியபோது, அவர் மிகவும் கலக்கமடைந்து, தரையிலே நடுங்கிக்கொண்டு விழுந்தார், அதிலிருந்து அவர் தேறிவரச் சில நாட்கள் ஆயிற்று.

எனது இரண்டாவது பணி, தேவாலயத்தில் ஊழியஞ்செய்து வந்த ஆசாரியனாகிய சகரியாவை சந்தித்து யோவான் ஸ்நானகரின் பிறப்பை அறிவிப்பதே ஆகும் . நான் சகரியாவுக்குத் தோன்றியபோது, அவரும் பயத்தினால் பீடிக்கப்பட்டார். தேவன் என்ன செய்யப் போகிறார் என்று நான் அவரிடம் சொன்னேன், ஆனால் அவர் அதை நம்பவில்லை.

ஆவிக்குரியத் தலைவர்கள் அவிசுவாசத்தைப் பரப்புவது உசிதமல்லவே; எனவே, அந்தக் குழந்தை பிறக்கும் வரை பேசுவதற்கான திறன் அவரிடமிருந்து எடுக்கப்பட்டது. அவருக்குப் பேச்சு திரும்பியபோது, அவர் அதைப் பயன்படுத்திக் கர்த்தரைத் துதித்து ஆராதித்தார்.

தானியேல் மற்றும் சகரியவை நான் சந்திக்க சென்றபோது அவர்கள் திகைப்படைந்தனர். அப்படியிருக்க இளம் பருவத்திலிருக்கும் ஒரு கிராமத்துப் பெண்ணிடம் ஒரு பணி நிமித்தம் நான் அனுப்பப்பட்டபோது, "இந்த ஊழியத்திற்கு நான் சரியான நபரா?" என்று சந்தேகிப்பது தான் எனது முதல் உள்ளுணர்வாக இருந்தது.

"நீ இந்தச் செய்தியை ஒரு இளம் பெண்ணிடம் கூற வேண்டும்," என்று நான் கட்டளையிடப்பட்டேன். "நான் இதுவரை கொடுத்த அறிவிப்புகளில் இதுவே மிக முக்கியமானது. உலகின் எதிர்காலம் இதில்தான் பற்றிக்கொண்டிருக்கிறது."



அந்தச் செய்தியைக் கேட்டபோது, என்னால் பேச முடியாமல் போனது. என்னால் அதைக் கிரகிக்கவே முடியவில்லை. உண்மையென்னவென்றால், என்னால் இன்னமும் அதைக் கிரகிக்க முடியவில்லை.

நான் விவரங்களைக் குறித்துக்கொண்டு புறப்பட்டேன் – எருசலேமுக்கல்ல, தேவாலயத்திற்கல்ல, பிரதான ஆசாரியன் காய்பாவின் மகளிடமும் அல்ல, மாறாக புறக்கணிக்கப்பட்ட சிறிய ஊராகிய நாசரேத்திலிருந்த ஒரு ஏழைப் பெண்ணிடமே சென்றேன். அவள் ஏன் தெரிந்துகொள்ளப்பட்டாள் என்று என்னால் கூற முடியாது ஆனால் தெரிந்துகொள்ளும் உரிமை அவருக்கே உண்டு என்பதை தான் என்னால் சொல்லக்கூடும்.



மரியாளுடன் ஒரு சந்திப்பு

அந்த இளம் பெண்ணின் பெயர் மரியாள், அவள் கன்னிகையாயிருந்தாள்; யோசேப்பு என்பவருடன் திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்டிருந்தாள். அவர்களுடைய திருமணம் திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் அது இன்னும் நடக்கவில்லை.

நான் மரியாளிடம் தோன்றியபோது, எனது மிகவும் அன்பான வாழ்த்துக்களை சொன்னேன்: "தேவனால் மிகவும் கிருபை பெற்றவளே, வாழ்க! கர்த்தர் உன்னோடே இருக்கிறார்."

யார் அதிகமாய்ப் பயந்தோம் என்று எனக்குத் தெரியவில்லை. என்னை கண்ட அவளா? அல்லது அவள் எப்படி தேவ திட்டத்தை ஏற்றுக்கொள்வாள் என்ற என்னுடைய கலக்கமா?. ஒருவேளை அவள் என்னைக் கண்டு அலரிடித்துக்கொண்டு ஓடிவிட்டால் என்ன ஆகும்? ஆனால் அவள் விசுவாசமுள்ள ஒரு பெண் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது, மேலும் நான் கர்த்தரிடமிருந்து வந்த தூதன் என்பதை அவள் உணர்ந்ததாகவே தோன்றியது.

அவள் மிகவும் கலங்கியிருப்பதைக் கண்டு, நான், "மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்" என்று சொன்னேன். 'கிருபை' என்னும் வார்த்தைக்கு 'தயை ' என்று பொருள். "உனக்கு தேவனிடத்திலிருந்து தயை அளிக்கப்பட்டிருக்கிறது " – இதைத்தான் நான் அவளிடம் சொன்னேன்.

பின்னர் நான் அவளிடம் அந்தச் செய்தியைக் கொடுத்தேன்: "இதோ, நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்று அழைக்கப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின்மேல் என்றென்றைக்கும் ராஜ்யம்பண்ணுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவே இராது" என்று சொன்னேன்.

அவள் என்ன சொல்லுவாள் என்று ஆச்சரியத்துடன் காத்திருந்தேன். நித்தியத்தில் இருப்பது போலவே, நேரம் உறைந்துபோனது போலிருந்தது. பின்னர் அவள் பேசினாள்: "இது எப்படி ஆகும்? நான் புருஷனை அறியேனே".

நான் சொன்னதை அவள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. தானும், தனது வருங்காலக் கணவரும் ஒரு குமாரனைப் பெறுவார்கள் என்றும், அவர் மனித வரலாற்றில் ஒரு சிறந்த நபராக மாறுவார் என்றும் அவள் நினைத்தாள்.

ஆகவே நான் விளக்க முயற்சி செய்தேன். மாபெரும் இரகசியத்தை வெளிப்படுத்த வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்கவில்லை. "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்று சொன்னேன்.

தேவன் எப்படி மனித உருவை எடுத்து, இவ்வுலகில் ஒரு உதவியற்ற குழந்தையாகப் பிறக்க முடியும் என்பது தூதர்களாகிய எங்களால்கூடப் புரிந்துகொள்ள முடியாத ஒரு விஷயமாகும். நான் மரியாளிடம் சொன்னதை மட்டுமே என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும் : "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை."



தேவன் தமது சித்தத்தை முழுமனதுடனும் மனப்பூர்வமாகவும் கீழ்ப்படிந்து செய்கிறவர்கள் மூலமாகவே செயல்படுகிறார். ஒரு மணமகனைப் போல நம்முடைய சித்தத்தை அவர் வசீகரிக்கும் வழியைக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் தமது சித்தத்தை யாருடைய வாழ்விலும் கட்டாயப்படுத்துவதில்லை.

மரியாள் எதைத் தேர்வு செய்வாள் என்று காத்திருந்தபோது நான் கலங்கினேன். பின்னர் அவள், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்றாள்.

இயேசு

அந்தப்படியே, ஒன்பது மாதங்களுக்குப் பிறகு இயேசு பிறந்தார். அந்தக் குறிப்பிட்ட இரவில், எனது சகாக்களின் ஒரு முழுக்கூட்டமும் வானத்தில் தோன்றி, தேவனைத் துதித்து, மனிதர்களுக்கு இந்த நற்செய்தியை அறிவித்தது.

நாங்கள் அவருடைய வாழ்க்கையைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அப்படியே அவர் இருந்தார். மேலும் அவருடைய ஊழியமானது முழு மனித வரலாற்றிலும் நாங்கள் கண்ட எல்லாவற்றையும் விட, மூன்று ஆண்டுகளில் உலகிற்கு அதிக நன்மைகளைக் கொண்டுவந்தது.



ஆகையால்தான், அடுத்தடுத்து நடந்ததை நாங்கள் பார்த்தபோது எங்களால் நம்பவே முடியவில்லை: நீங்கள் அவரைச் சிலுவையில் அறைந்தீர்கள். அந்த நாளை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். அவர் கசையடிகளுக்கு உட்பட்டு, கட்டப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டபோது, நாங்கள் கலக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தோம். அவர் எங்களைக் உதவிக்கு கூப்பிடமாட்டாரா என்று காத்திருந்தோம், ஆனால் அவர் ஒருபோதும் கூப்பிடவில்லை.



அவர் சிலுவையிலே அறையப்பட்டபோது, நாங்கள் பிதாவிடம்: "தயவுசெய்து, நாங்கள் சென்று அவரைக் காப்பாற்றட்டுமா!" என்று கேட்டோம். ஆனால் பிதாவானவர் எங்களைத் தடுத்து நிறுத்தினார்.

மனிதர்கள் பயங்கரமான பாவ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இது எல்லாவற்றிலும் மிகவும் மோசமானதாகும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அன்று நிறைவேறவேண்டியதாயிருந்தது. ஆனால் எங்களால் கிரகித்து கொள்ளமுடியாதவண்ணம் அது இயேசுவின் மீது விழுந்தது!. அவர் உங்களுக்காகவே, தேவனுடைய நியாயத்தீர்ப்பைத் தம்முடைய சரீரத்திலே ஏற்றுக் கொண்டார். அவர் உங்களுடைய பாவங்களுக்காகத் தம்மையே பலியாகக் கொடுத்தார்.

அவர் மரித்தபோது, பரலோகம் நிசப்தமானது.

மூன்றாம் நாள் வரை தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதை நாங்கள் புரிந்துகொள்ளவில்லை. அந்த மகிமைப் பொருந்திய அதிகாலையை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்.



சீல் வைக்கப்பட்ட கல்லறையிலே வைக்கப்பட்டிருந்த இயேசுவின் சரீரம் அவருடைய ஜீவனால் மீண்டும் உயிர் பெற்றது. அவருடைய மனித சரீரம் , நித்தியத்திற்கு ஏற்றதாக மாறியது.

அவருடைய சரீரத்தைத் தேடிப் பெண்கள் கல்லறைக்கு வந்தபோது, இன்னொரு தூதன் அனுப்பப்பட்டு, அவர்களிடம், "அவர் உயிர்த்தெழுந்தார்!" என்று சொன்னான். அதன்பிறகு, அவர் தம்முடைய சீஷர்களுக்குப் பலமுறை தோன்றினார், பின்னர் அவர் பரலோகத்திற்கு ஏறினார். அவர் மீண்டும் பரலோகம் வந்ததினால் எங்களுக்கு கிடைத்த சந்தோஷத்தை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்.

ஆனால் உங்களுடைய சந்தோஷம் எங்களுடையதை விட இன்னும் பெரியதாக இருக்க வேண்டும். ஏனென்றால், இயேசு தூதர்களாகிய எங்களுக்காக மரிக்கவில்லை. அவர் உலகிற்கு வந்தபோது, தூதர்களின் சுபாவத்தை எடுத்துக்கொள்ளவில்லை. தேவன் மனிதனானார். அவர் உங்களைப் போன்ற மக்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார்.

தேவன் மனிதனானார். அவர் உங்களைப் போன்ற மக்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார்.

பரலோகத்திலே ஒரு மனிதர் இருக்கிறார், அவருடைய பெயர் இயேசு. அவர் உங்களுக்காக அங்கே இருக்கிறார். அவரே முன்னோடி – நித்திய காலமெல்லாம் தேவனுடைய சமுகத்திலே என்றென்றும் களிகூரப் போகிறவர்களின் முதல் பலன் அவரே ஆவார்.

இங்கே, பரலோகத்தில், இப்போது பேசப்படும் விஷயமெல்லாம் அவருடைய இரண்டாம் வருகையின் நாளைப் பற்றியே. அன்று நான் அவரோடு இருப்பேன், அவரில் அன்புகூர்ந்து அவரை நம்புகிற அனைவரும் அவருடன் இருப்பார்கள், நீங்களும் அங்கே இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

பரலோகத்தில் ஒரு கொண்டாட்டம்

உங்களுக்குத் தெரியாத சில காரியங்கள் எனக்குத் தெரியும், அதேசமயம் எனக்குத் தெரியாத சில காரியங்கள் உங்களுக்கும் தெரியும். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருப்பதும், நீங்கள் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருப்பதும், தேவனுடைய ஆவி உங்களுக்குள்ளே வாசம் பண்ணுவதும் எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்று உங்களுக்குத் தெரியுமா?

நான் ஒருபோதும் தொலைந்து போனதில்லை, எனவே மீட்கப்பட்டதின் சந்தோஷம் எனக்குத் தெரியாது. நான் ஒருபோதும் பாவம் செய்ததில்லை, எனவே மன்னிப்பைப் பெறுவது எப்படி இருக்கும் என்று என்னால் கற்பனை செய்ய முடியாது. உங்களுக்குக் கிடைத்த தேவனுடனான அந்த நெருக்கம் எனக்கு மலைப்பாக இருக்கிறது. என்னால் ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாத வழிகளில் நீங்கள் தேவனுடைய அன்பை அனுபவிக்க முடியும்.

ஆனால் எனக்குத் தெரிந்த, உங்களுக்கு மறைக்கப்பட்ட மற்ற விஷயங்களும் உள்ளன. நீங்கள் பரலோகத்தையோ அல்லது நரகத்தையோ கற்பனை செய்ய முடியாது. இயேசு உங்களை எதிலிருந்து காப்பாற்றினார் அல்லது எதற்காகக் காப்பாற்றினார் என்பதை நீங்கள் கற்பனை செய்ய முடியாது.





எனக்கு மலைப்பாக இருப்பது என்னவென்றால், அநேக மனிதர்கள் தங்களுடைய நித்திய எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், மாயையான உலகவாழ்வு தான் சிறந்தது என்று வாழ்ந்து, தங்கள் பார்வைக்கு அப்பால் இருக்கும் நித்தியத்தைப் பற்றி முற்றிலும் அறியாதிருக்கிறார்கள்.
ஆனால் ஒரு பாவி மனந்திரும்பும்போதெல்லாம், பரலோகத்தில் ஒரு பெரிய கொண்டாட்டம் நடக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். தேவன் உங்களுக்காக இருக்கிறார், இன்று நீங்கள் அவரிடமிருந்து எவ்வளவு தூரம் விலகி இருந்தாலும், நீங்கள் மீண்டும் வர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

அதற்காகத் தான் இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வந்தார். காணாமல் போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே அவர் வந்தார். அநேகரின் மீட்புக்காகத் தம்முடைய ஜீவனையே நமக்காக கொடுக்க வந்தார். அவரை விசுவாசியுங்கள், நீங்கள் ஏமாற்றமடையமாட்டீர்கள். அவரைப் பின்பற்றுங்கள், அவர் உங்களை மாபெரும் மகிழ்ச்சிக்குள் வழிநடத்துவார்.

ஜெபம்

பிதாவே, எங்களுக்காக இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பியதற்காக உமக்கு நன்றி. மேலும், இயேசுவே பரலோகத்தின் மாபெரும் சந்தோஷமென்று, இன்று எங்களுக்கு நினைவூட்டியதற்காக உமக்கு நன்றி. அவரே எங்களுடைய மாபெரும் மகிழ்ச்சியாக இருப்பாராக! ஆமென்.

மரியாளின் கதை



என் வாழ்க்கையை என்றென்றைக்கும் மாற்றிய அந்த நாள் வேறு எந்த ஒரு நாளையும் போலவேதான் ஆரம்பித்தது. நான் என் வழக்கமான வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன், திடீரென்று, என் அருகே வேறு யாரோ ஒருவர் நிற்பதை உணர்ந்தேன்.

மெதுவாக நிமிர்ந்து பார்த்தபோது, அங்கே அவர் இருந்தார். தேவன் ஒரு தூதனை என்னிடம் அனுப்பினார், அவர் தோன்றியபோது, நான் மிகவும் அச்சத்தினால் நிறைந்தேன் என்று உங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும். என் இருதயம் படபடத்தது, என் முழங்கால்கள் நடு நடுங்கின, நான் உட்கார்ந்திருக்காவிட்டால், ஒருவேளை மயக்கமடைந்திருப்பேன்.

தேவன் நம் அருகில் வரும்போது, நமக்குள் எதோ ஒருவிதமான அச்ச உணர்வு ஏற்படுமல்லவா. தேவன் தூரமாய் இருக்கும்போது நாம் பாதுகாப்பாக இருப்பதாக உணருகிறோம், ஆனால் அவர் நமக்கு மிக நெருக்கமாக வந்தால் நாம் பிரச்சினையில் அகப்படுவோமே என்று பயப்படுகிறோம்.

ஆனால் அந்தத் தூதன் என்னிடம், "மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்" என்று சொன்னான். கிருபை என்றால் “இரக்கமும் - தேவதயவும்”, நாம் அவற்றை பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்கள், ஆனால் தேவன் அதை நமக்கு இலவசமாக அளிக்கிறார். அந்த நாளில் தேவன் என்மேல் கிருபை காட்டினார்.

தேவனுடைய வல்லமையைக் காணுதல்

தேவதூதன் சொன்ன காரியம் முற்றிலும் திகைப்பூட்டுவதாக இருந்தது: "மரியாளே, நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக, அவர் பெரியவராயிருப்பார்,

உன்னதமானவருடைய குமாரன் என்று அழைக்கப்படுவார். கர்த்தர் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மேல் என்றென்றைக்கும் ராஜ்யம்பண்ணுவார்."

ஒரு குழந்தையா ? அது எப்படி ஆகும்? நான் ஒரு கன்னிகையாயிற்றே.

என் பிள்ளை தாவீதின் சிங்காசனத்தில் விற்றியிருப்பது எப்படி நடக்கும்? நான் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். நாங்கள் அரண்மனைகளில் வாழ்பவர்களோ அல்லது ராஜாக்களுடன் பழகுபவர்களோ இல்லை.

என்றென்றைக்கும் ராஜ்யம் பண்ணும் ஒரு பிள்ளையா? இந்த உலகத்தில் எதுவும் என்றென்றைக்கும் நீடிப்பதில்லை, அப்படியிருக்க, அது எப்படிச் சாத்தியமாகும்?

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, குழப்பத்தை உண்டாக்கிய சொல் என்னவென்றால், பிறக்கப்போகும் அந்தக் குழந்தை "உன்னதமானவருடைய குமாரன்" என்று தூதன் சொன்னதுதான் , என்னுடைய குழந்தைகளில் எவராவது தேவனுடைய குமாரனாக எப்படி இருக்க முடியும்?



அந்தத் தூதனிடம் அதற்கான பதில் இருந்தது: "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்".

தேவனால் செய்யப்பட்ட இந்த இரகசியத்தைக் குறித்து நான் இன்னும் ஆச்சரியப்படுகிறேன். தேவன், என் கர்ப்பத்திலே ஒரு புதிய ஜீவன் கருத்தரிக்கக் காரணமானார், அந்த ஜீவன் அவருடைய சொந்த குமாரனின் ஜீவன் ஆகும். என் மூலமாகவே, தேவன் சரீரமெடுத்து, உதவியற்ற குழந்தையாக இந்த உலகத்தில் பிறந்தார்.

இன்னும் ஒரு விஷயம், பல வருடங்களாகக் ஒரு குழந்தைக்காக காத்திருந்த என்னை விட வயதில் மூத்த சகோதரியான எலிசபெத், இப்பொழுது ஆறு மாத கர்ப்பிணியாக இருக்கிறாள் என்று தூதன் என்னிடம் சொன்னான். மேலும் அந்தத் தூதன், "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்றும் சொன்னான்.

ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

எனக்கு எப்படிப் பதிலளிப்பது என்று தெரியவில்லை. எனக்கு வாக்களிக்கப்பட்டவைகள் என் புரிதலுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது, மேலும் என்னிடமிருந்து தேவனுக்கு என்ன தேவைப்படும் என்று நான் நினைக்கக்கூடத் துணியவில்லை. ஆனாலும், அந்தத்தருணமே , தேவனுடைய ஆவியானவர் என்னுடன் இருக்கிறார் என்பதையும், எனக்குத் தேவையான அனைத்தையும் அவர் எனக்குக் கொடுப்பார் என்று நான் அறிந்திருந்தேன்.
"இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று சொன்னேன். பின்னர் அந்தத் தூதன் மறைந்துவிட்டான்.



எலிசபெத்தும் யோசேப்பும்

நான் என் சகோதரி எலிசபெத்துடன் சென்று தங்க முடிவுசெய்தேன், நான் அவளின் வீட்டிற்கு வந்த போது, நாங்கள் இருவருமே ஆனந்தத்தினால் நிரப்பப்பட்டோம். "இத்தனை வருடங்களாகக் குழந்தைகாக ஏங்கி எதிர்பார்த்த பிறகு, தேவன் இந்த அற்புதமான குழந்தைச்செல்வத்தால் உன்னை ஆசீர்வதிப்பார் என்று யார் கற்பனை செய்திருப்பார்கள்?" என்று நான் சொன்னேன்.

எலிசபெத், தான் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கும் குழந்தையைத் தன் உள்ளங்கைகளால் மெதுவாகத் தடவியவாறு, வாசலில் பிரகாசமாக நின்றாள். "மேலும் உன் வாழ்த்துதலின் சத்தம் என் காதில் விழுந்தபோது, என் வயிற்றிலிருக்கிற பிள்ளை சந்தோஷத்தினால் துள்ளியது" என்று அவள் சொன்னாள். இதன் பொருள், நாங்கள் மூவரும் களிகூர்ந்தோம், பரலோகத்தில் உள்ள தேவனும் களிகூர்ந்தார் என்பதில் எந்தச் சந்தேகமும் என் மனதில் இல்லை.

பின்னர் தேவனுடைய ஆவியானவர் எலிசபெத்தின்மேல் வந்தார், அவள் உரத்தசத்தமாக என்னிடம்: "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" என்று சொன்னாள்.



நான் கர்ப்பமாய் இருக்கிறேன் என்று அவளுக்கு எப்படித்தெரியும்? நான் இன்னும் எலிசபெத்திடம் நான் சுமக்கும் குழந்தையைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே! அவள் அறிந்து கொள்ள ஒரே வழி, தேவனே அவளுக்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்பதுதான்!

பின்னர் எலிசபெத், நான் ஒருபோதும் மறக்க முடியாத சில வார்த்தைகளைச் சொன்னாள்: "கர்த்தரால் உனக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்று விசுவாசித்தவளே பாக்கியவதி!", என்பதாகும்.

தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நான் ஏற்கனவே விசுவாசித்திருந்தேன். ஆனால் எலிசபெத்தை நான் சந்தித்ததின் மூலமாக அவள் என் விசுவாசத்தை உறுதிப்படுத்தினாள்: "மரியாளே, அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும். தேவன் சொன்னது நிச்சயம் நிறைவேற்றப்படும்", என்பதே.

நான் உணர்ந்த சந்தோஷத்தை என்னால் அடக்கமுடியவில்லை. தேவனுடைய குமாரன் உலகிற்கு வருகிறார், நான் அவருடைய ஜீவனை எனக்குள் சுமக்கிறேன். என் முழு உள்ளமும் துதியால் நிரம்பியது; அது எனக்கு அளிக்கப்பட்ட வார்த்தைகளாக வெளிப்பட்டுப் பொங்கி வழிந்தது:

"என்ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது;
என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.
அவர் தமது அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்.

இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப்
பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர்
மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம்
பரிசுத்தமுள்ளது.“



நான் எலிசபெத்துடன் இருந்த காலம் முழுவதும், யோசேப்பு என்ன செய்துகொண்டிருப்பார் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் திருமணம் செய்ய நியாயப்படி நிச்சயிக்கப்பட்டிருந்தோம், எங்கள் திருமண நாளை நாங்கள் இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். யோசேப்பு ஒரு நல்ல மனிதர், மேலும் என்னை ஆழமாக நேசிக்கிறார் என்று எனக்குத் தெரியும், ஆனால் தேவன் என் வாழ்வில் என்ன செய்கிறார் என்பதை அவர் எப்படி புரிந்துகொள்வார் என்று நான் குழம்பினேன். மேலும் அவர் என்னைத் தள்ளி திருமண உறவை ரத்து செய்வாரோ என்று பயந்தேன். இதுவே தேவன் என் வாழ்க்கையில் வைத்த அழைப்பின் விலையாக இருக்குமானால், அதைக் கொடுக்கவும் நான் தயாராக இருந்தேன்.

> “உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே”

ஒரு தூதன் கனவில் அவரிடம் பேசினார் என்று யோசேப்பு என்னிடம் சொன்னபோது, என் சந்தோஷத்தை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். "உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே" என்று தூதன் சொல்லியிருந்தார். “ஏனென்றால், அவளிடத்தில் உண்டாயிருக்கிறது, பரிசுத்த ஆவியினால் உண்டானது," மேலும் ஒரு காரியம் என்று யோசேப்பு சொன்னார்.



"நான்அவருக்கு இயேசு என்று பெயரிடவேண்டுமாம்."

தூதன் யோசேப்பிடம் சொன்னதும், தூதன் என்னிடம் சொன்னதும் சரியாகப் பொருந்திப்போனது. அது தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு மற்றுமொரு உறுதிப்பாடாக எனக்கு காணப்பட்டது .

பெத்லகேமும் மேய்ப்பர்களும்

குழந்தை பிறப்பதற்குச் சற்று முன்பு நாட்டில் உள்ள அனைவரும் தாங்கள் பிறந்த ஊருக்கு சென்று தங்கள் பெயர்களைப் பதிவுசெய்ய வேண்டும் என்று ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன் பொருட்டு, நான் யோசேப்புடன் பெத்லகேமுக்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

அந்தச் சிறிய ஊரில் ஒரே ஒரு சத்திரமே இருந்தது, நாங்கள் வந்தபோது அது ஏற்கெனவே நிரம்பியிருந்தது. எனவே நாங்கள் விலங்குகள் இருந்த இடத்தில் அடைக்கலம் கண்டோம், அங்கேதான் இயேசு பிறந்தார்.

நாங்கள் மூவர் மட்டுமே அங்கே இருப்பது விசித்திரமாகத் தோன்றியது. உலகத்திலேயே நிகழ்ந்த மாபெரும் அற்புதம் என் கரங்களில் இருந்தது. எனக்குத் தெரிந்தவரை, தேவன் செய்த மாபெரும் அற்புதத்தை யோசேப்பும் நானும் மட்டுமே அறிந்திருந்தோம்.

ஆனால் அது விரைவில் மாறியது. அவர் பிறந்த இரவு முடிவதற்குள், சிலர் எங்களின் தங்குமிடத்தை நோக்கிவரும் சத்தம் எனக்குக் கேட்டது. அவர்களில் ஒருவர், ஒரு தூதன் தங்களுக்கு தோன்றியதாகவும், அவர்கள் அனைவரும் பயத்தால் நிறைந்ததாகவும் எங்களிடம் சொன்னார். அவர்கள் என்ன உணர்ந்து இருப்பார்கள், என்று நான் அறிந்திருந்ததினால் புன்னகைத்தேன்.



பின்னர் அவர்களில் மற்றுமொருவர் முன்னே வந்து சொன்னார்: "ஆதலால் தூதன், எங்களிடம் பயப்படாதீர்கள் என்று சொல்லி, 'இதோ, எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்கு இரட்சகர் பிறந்திருக்கிறார்; இவரே கிறிஸ்து என்னும் கர்த்தர்' என்றுசொன்னார்."

ஒரு தூதன் யோசேப்பிடம், "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார், ஆகையால் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" என்று சொல்லியிருந்தார்

தேவன் இந்த மேய்ப்பர்களுடன் பேசியதை , அவர்கள் சொன்னபோது நான் கவனமாகக் கேட்டேன். இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்றும், அவருடைய பிறப்பு எல்லா மக்களுக்கும் நற்செய்தி என்றும், அவரே எல்லாருக்கும் கர்த்தர் என்றும் அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினார்கள். அவர்கள் சொன்ன அனைத்தும் யோசேப்புக்கும் எனக்கும் வெளிப்படுத்தப்பட்டவற்றுடன் பொருந்தியது. எனவே நான் இந்த எல்லாக் காரியங்களையும் என் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, என் இருதயத்திலே சிந்தித்துக்கொண்டிருந்தேன் .

தேவாலயமும் சிலுவையும்



இயேசு பிறந்த சில வாரங்களுக்குப் பிறகு, நாங்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு சென்று ஒரு பலியைச் செலுத்தவும், இயேசுவைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தவும் சென்றோம்.

நாங்கள் அங்கிருக்கும்போது, ஒரு வயதானவர் எங்களிடம் வந்து, குழந்தையைத் தன் கைகளில் ஏந்தவேண்டும் என்று கேட்டார். அவர் தம் வாழ்நாள் முழுவதும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவுக்காகக் காத்திருந்ததாகவும், அவர் இறப்பதற்கு முன் இந்தக் குழந்தையைப் பார்ப்பார் என்று தேவன் அவரிடம் சொல்லியிருந்ததாகவும் கூறினார்.

இயேசுவைத்தன் கைகளில் ஏந்திக்கொண்ட அந்த முதியவர், அவரை ஆசீர்வதித்தார், பின்னர் யோசேப்பையும் என்னையும் ஆசீர்வதித்தார்.

இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட மேசியா, அவருடைய பிறப்பு எல்லா ஜனங்களுக்கும் நற்செய்தியாகும், மேலும் அவரே அனைவருக்கும் ஆண்டவர் ஆவார்.

பரிசுத்த ஆவியானவரால் தெளிவாக அவருக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைகளைப் பேசிய அவர்: "இதோ, இவர் அநேகரை விழவும், அநேகரை எழும்பவும், விரோதிக்கப்படும் அடையாளமாகவும் வைக்கப்பட்டிருக்கிறார்" என்று சொன்னார். பின்னர் தன் கண்களில், துக்கத்துடனும் பரிவுடனும் என்னை நேராகப் பார்த்து, "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்றும் சொன்னார்.

என் குழந்தை விரோதிக்கப்படுவாரா?
என் ஆத்துமாவைப் பட்டயம் உருவிப்போகுமா?



இந்த வார்த்தைகளை நான் அடிக்கடி யோசித்துப்பார்ப்பேன், வேதனையுடன் கூடிய இந்த வார்த்தைகள் உண்மையாயிற்று . அவர் தம்முடைய சொந்தங்களிடம் வந்தார், ஆனால் அவருடைய சொந்தங்கள்அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அவருக்கு விரோதமான சதித்திட்டங்கள் தொடங்கின, முடிவில் அவர்கள் அவரைச் சிலுவையில் தொங்கவிட்டார்கள்.

மூன்றாம்நாளில், அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் பரலோகத்திற்கு பரம் ஏறினார் , எனக்காகவும், அவரை நம்புகிற அனைவருக்காகவும் பரலோகத்தின் வாசல்களைத் திறந்து வைத்தார்.

நான் அங்கே இருந்தேன். அவர்கள்அவருடைய கைகளில். ஆணிகளை அறைந்தபோது, என் ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவிப் போனது போலிருந்தது. இதைத்தான் அந்த வயதான முதியவர் என்னிடம் முன்பே கூறியிருந்தார். ஆனால் நான் அனுபவித்த வேதனையை, அவர் அனுபவித்த வேதனையுடன் ஒப்பிடமுடியாது.



இயேசு சிலுவையில் பாடுபட்டபோது நம்முடைய பாவங்களை அவர் சுமந்தார். நாம் மன்னிக்கப்படவும், இரட்சிக்கப்படவும், தேவனுடன் ஒப்புரவுஅடையவும் அவர் நம் பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார்.

இயேசு மரித்தபோது நான் துக்கத்தால் நிரம்பிப்போனேன். ஆனால் அது ஒரு முடிவல்ல . மூன்றாம் நாளில், அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் பரலோகத்திற்கு பரம் ஏறினார், எனக்காகவும், அவரை நம்புகிற அனைவருக்காகவும் பரலோகத்தின் வாசல்களைத் திறந்து வைத்தார்.

ஜெபம்

பிதாவே, இயேசு கிறிஸ்துவின் வருகையினால் எங்களுக்குக் கிடைத்த உம்முடைய கிருபைக்காக உமக்கு நன்றி.
அவர் உலகிற்கு வந்து எங்களை இரட்சிக்கவும், காப்பாற்றவும் வந்ததற்காக உமக்கு நன்றி.
அவரில் என் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்க எனக்கு உதவி செய்யும்.
உம்மால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று விசுவாசிக்க எங்களுக்கு உதவி செய்யும்! ஆமென்.



யோசேப்பின் கதை



உலக வரலாற்றில் இதுவரை நடந்த மாபெரும் நிகழ்வுக்கு எனக்கு ஒரு சிறப்பு இடம் கிடைத்தது. நான் மரியாளோடு திருமணம் செய்ய நியமிக்கப்பட்டிருந்தேன். அவள் உலகத்தின் இரட்சகரைப் பெற்றெடுக்க தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறாள் என்பது எனக்குத் தெரியாது. மரியாளினுடைய பிள்ளையைப் பற்றி நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அவருடைய பிறப்புக்கும் எனக்கும் துளியும் சம்பந்தமில்லை என்பதே. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சேர்க்கை புனிதமானது என்றும், அது திருமணத்திற்காகப் பாதுகாக்கப்படுகிறது என்றும் நாங்கள் அறிந்திருந்தோம். நான் மரியாளுக்காக என்னை பாதுகாத்தேன், மரியாள் எனக்காகத் தன்னைப் பாதுகாத்தாள். மரியாள் அந்தச் செய்தியுடன் என்னிடம் வந்தபோது நான் முற்றிலும் நொறுங்கிப்போனேன்.

அவள் தனது வாழ்வில் நடந்தவற்றை என்னிடம் சொல்வது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்று என்னால் கற்பனை செய்ய முடியாது. ஒரு தூதனைப் பற்றி அவள் ஏதோ ஒன்று சொன்னாள், ஆனால் எனக்கு நினைவில் இருப்பது, அவள் “கர்பமாயிருக்கிறேன்” என்ற வார்த்தையைச் சொன்னது மட்டுமே. நான் கலங்கினேன். என் திருமணத்திற்கான எதிர்பார்ப்பு ஒரு கனவாக மாறியது .

அந்தத் திருமணத்தை நான் தொடர்வதற்கு வழியே இல்லை. என் நம்பிக்கையைக் கெடுத்த ஒருவருடன் நான் எப்படி வாழ முடியும்? ஒரு மனிதன் இல்லாமல் எந்தப் பெண்ணும் குழந்தை பெறுவதில்லை என்று எனக்குத் தெரியும். குறைந்தபட்சம், அந்தக் காலகட்டத்தில் நான் அதை அப்படித்தான் பார்த்தேன்.

நான் மரியாளை அதிகமாக நேசித்ததால் அவளை நான் காயப்படுத்த விரும்பவில்லை , அனால் அந்த திருமணத்திற்கு உடன்படுவது எனக்கு சாத்தியமாக தோன்றவில்லை.

மரியாள் யூதேயாவில் உள்ள தன் உறவினரான எலிசபெத்துடன் சென்று அங்கே தங்குவதே சிறந்தது என்று நினைத்ததாக என்னிடம் கூறினாள். என் உலகம் சிதறுண்டது. ஒரு நிமிடம் நான் நேசித்த பெண்ணைத் திருமணம் செய்ய ஆசையோடு காத்திருந்தேன், ஆனால் அடுத்த நிமிடம் என் தச்சுக்கடையில் தனிமையில் துயரத்தோடு அமர்ந்திருந்தேன்.

தேவன் என்னுடன் பேசிய விதம்

ஒரு நாள் இரவில், என் வாழ்க்கையில் ஒருபோதும் நடக்காத ஒரு அனுபவம் எனக்குக் கிடைத்தது. ஒரு கர்த்தருடைய தூதன் கனவில் எனக்குத் தோன்றி, "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்று சொன்னான்.

> "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்."

நான் விழித்தெழுந்தபோது, ஜெப ஆலயத்தில் நான் கற்ற ஒரு வேத வசனம் என் நினைவுக்கு வந்தது. தேவன் தாம் மேசியாவை அனுப்புவதாக வாக்குப்பண்ணியிருந்தார். இந்த மீட்பர் உலகிற்கு எப்படிப் பிறப்பார் என்பதை ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபோது, அவர், "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்" என்று சொல்லியிருந்தார்.

ஒரு கன்னிகையா! இன்னும் அதிகமாகச் சொல்லவேண்டுமானால், ஏசாயா தீர்க்கதரிசி கூறியபடி ஒரு கன்னிகைக்குப் பிறக்கும் குழந்தை இம்மானுவேல் என்று பெயரிடப்படுவார், அதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். ஆதி காலம் முதற்கொண்டே, தேவன் உலகிற்கு ஒரு மீட்பரை அனுப்பப் போவதாக வாக்குறுதி அளித்திருந்தார். தேவன் தமது வாக்குறுதியை நிறைவேற்றப் போகிறாரா? சிறிதளவில் துவங்கிய விசுவாசம் பின்னர் உறுதியான விசுவாசமாக மாறியது .

நான் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டேன். நான் தெற்கே யூதேயாவுக்கு விரைந்தேன், என் அன்பான மரியாளை என் கைகளில் அணைத்து, நடந்ததை அவளிடம் சொல்ல ஆவலுடன் காத்திருந்தேன்.

"நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்," என்றேன். "

ஒரு கர்த்தருடைய தூதன் என் கனவில் எனக்குத் தோன்றினார்."
மரியாள் சிரித்தாள், அவள் ஆச்சரியப்படவில்லை என்பதை நான் உணர்ந்தேன்.



"அவர் என்ன சொன்னார்?" என்று அவள் கேட்டாள்.

"மூன்று விஷயங்கள்," என்றேன். "முதலாவது, அவர் நான் பயப்பட வேண்டாம் என்று சொன்னார். பின்னர் அவர், உனக்குள் உற்பத்தியாயிருப்பது பரிசுத்த ஆவியினால் உண்டானது என்று சொன்னார்..."

மரியாளால் தனது சந்தோஷத்தை அடக்க முடியவில்லை. "யோசேப்பே, ஒரு தூதன் எனக்குத் தோன்றினார் என்று நான் உங்களிடம் முன்னமே சொல்ல முயற்சித்தேன்! அவர் என்னிடம் சொன்னதைத்தான் உங்களிடமும் சொன்னார்! தூதன் என்னைக் கலங்காதே என்று சொன்னார், பின்னர் எனக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்று சொன்னார். நான் கன்னிகையாயிருக்கையில் இது எப்படி ஆகும் என்று கேட்டபோது, இது பரிசுத்த ஆவியின் கிரியையாக இருக்கும் என்று அவர் என்னிடம் சொன்னார். "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்."

எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதைக் கண்டு திகைத்துப்போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

"இன்னும் ஒன்று இருக்கிறது," என்று என் கதையை முடிக்க ஆவலுடன் சொன்னேன். "அந்தக் குழந்தைக்குரிய பெயரையும் தூதன் எனக்குக் கொடுத்தார்."

"சொல்லுங்கள்," என்று மரியாள் எதிர்பார்ப்புடன் கண்களை விரித்தாள்.

"அந்தத் தூதன் அவரை இப்படி அழைக்கச் சொன்னார்..." என்று நான் நிறுத்தினேன், நான் முடிப்பதற்குள், மரியாள் "இயேசு!" என்றாள்.

"அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

"அதையே என்னிடமும் தூதன் சொன்னார்," என்றாள் அவள்.

தேவனுடைய கிருபையினால், எங்கள் இருவருக்கும் ஒரே வெளிப்பாட்டை அவர் கொடுத்து, எங்களை ஒன்று சேர்த்ததை நினைத்து நாங்கள் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டோம். தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார், அந்த இரட்சிப்பின் நோக்கத்தின் மையத்தில் எங்கள் சிறிய வாழ்க்கையும் அடங்கியிருந்தது. அதைப் பற்றி நான் சிந்திக்கச் சிந்திக்க, அது எனக்கு மிகவும் மலைப்பாகத் தோன்றியது.

தேவன் எனக்கு சொன்னதற்குக் கீழ்ப்படிந்து, நான் மரியாளை என் மனைவியாக வீட்டிற்குக் அழைத்து வந்தேன், மேலும் குழந்தை பிறக்கும் வரை நான் அவளுடன் எந்தவிதமான ஐக்கியமும் கொள்ளவில்லை.

பெத்லெகேமை நோக்கி எங்களது பயணம்



சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு புதிய அரசாங்க ஆணையைப் பற்றிய செய்தியுடன் ரோமாபுரியிலிருந்து ஒரு செய்தியாளன் எங்கள் ஊருக்கு வந்தான். மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக, மக்கள் அனைவரும் தங்கள் குடும்ப பூர்வீக ஊருக்குத் திரும்பிச் சென்று பதிவு செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. கற்பனை செய்ய முடிகிறதா? அனைவரும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

எல்லாத் திசைகளிலும் வண்டிகளுடனும் மிருகங்களுடன், குடும்பங்கள் பயணித்ததால் சாலைகளில் குழப்பம் நிலவியது.

மரியாளுக்குப் பிரசவ காலம் நெருங்கியிருந்தது, ஆனால் ரோம சாம்ராஜ்யம் கட்டளையிட்டால் அதற்கு விதிவிலக்கு இல்லை. எனவே நான் கழுதையை ஆயத்தப்படுத்தினேன், நாங்கள் இருவரும் என்னுடைய பூர்வீக ஊராகிய பெத்லெகேமை நோக்கிப் பயணம் செய்தோம்.

இதுவும் தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதி என்பதை நான் பின்னரே உணர்ந்தேன். மேசியா பெத்லெகேமிலிருந்து வருவார் என்று மீகா தீர்க்கதரிசி சொல்லியிருந்தார். இயேசு பிறக்கவிருந்த நேரத்தில், பெத்லெகேமுக்கு நாங்கள் செல்லும்படி ஒரு ரோமச் சக்கரவர்த்தி கட்டளையிட தேவன் சிந்தை வைத்தார். இது என்ன ஒரு ஆச்சரியம்!.

நாங்கள் வந்தபோது பெத்லெகேம் நிரம்பி வழிந்தது, சத்திரத்தில் எங்களுக்கு இடமில்லை. அதனால் நாங்கள் மிருகங்களுடன் தஞ்சம் புகுந்தோம். சில வைக்கோல்களைச் சேர்த்து, மரியாளுக்காக ஒரு படுக்கை செய்தேன், அங்கேதான் இயேசு பிறந்தார்.



அந்த மகிழ்ச்சியான தருணத்தை என்னால் உங்களிடம் விவரிக்க முடியாது. தேவனுடைய அற்புதமான பரிசை முதன்முதலில் தொட்டவன் நான். என் கைகள் அவரை உலகிற்குக் கொண்டு வந்தன, அவரை என் கைகளில் முதன்முதலில் பிடித்த பாக்கியம் எனக்கு கிடைத்தது .

ஞானிகள்

இயேசு பிறந்த பிறகு, நான் ஒரு வீட்டைக் கண்டுபிடித்து பெத்லெகேமில் வழக்கமான எங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்தோம். ஆனால் ஒரு நாள் இரவு, எங்கள் அமைதியான வாழ்வில் ஒரு இடையூறு ஏற்பட்டது. அது என்னவென்றால் மூன்று பேர் வந்து, தாங்கள் ராஜாக்கள் என்றும், இயேசுவைப் பார்க்க வந்திருப்பதாகவும் சொன்னார்கள். இந்த ராஜாக்கள் கிழக்கிலிருந்து வந்தவர்கள். அவர்கள் அந்நிய தேசத்தினர் (புறஜாதியார்), ஒரு நட்சத்திரத்தின் மூலமாக தேவன் அவர்களுடன் பேசியிருந்தார், அது பெத்லெகேமுக்கு நீண்ட தூரப் பயணத்தில் அவர்களை வழிநடத்தியது. அந்த ராஜாக்கள் இயேசுவைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து, அவரை ஆராதித்தார்கள். பின்னர் அவர்கள் அவருக்காகக் கொண்டு வந்த பரிசுகளைத் திறந்தார்கள் – பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப்போளம்.

அவர்களது வருகையைப் பற்றி நான் நினைக்கும்போது இன்னும் சிரிக்கிறேன். இந்த ராஜாக்கள் மிகவும் உயர்வான நிலையில் இருந்தனர் , நாங்களோ தாழ்மையான நிலையில் இருந்தோம் . தேவன் பணக்காரர்களையும் ஏழைகளையும் இயேசுவின் மூலம் ஒன்று சேர்த்தார், நாங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு அவரை ஆராதித்தோம்.

மீண்டும் பயணம்

ராஜாக்கள் எங்களை விட்டுச் சென்றபோது, ஒரு கர்த்தருடைய தூதன் மறுபடியும் கனவில் என்னுடன் பேசினார். "எழுந்திரு," என்று அவர் சொன்னார். "குழந்தையையும் அவருடைய தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு ஓடிப் போய்விடு;



ஏனென்றால் ஏரோது குழந்தையைக் கொல்லும்படி அவரைத் தேடப் போகிறான்."

அவரைக் கொல்லவா? உலகத்தின் இரட்சகரைக் கொல்ல ஏரோது ஏன் விரும்ப வேண்டும்? மற்ற தேசங்களின் ராஜாக்கள் அவரை ஆராதிக்கும்போது, நம்முடைய ராஜா ஏன் அவரைக் கொல்ல வேண்டும்?

அது எனக்குப் புரியவில்லை, ஆனால் தேவன் பேசிவிட்டார், நாங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று எனக்குத் தெரியும். எனவே எங்களால் முடிந்ததை எடுத்துக்கொண்டு, இரவின் மறைவிலே பெத்லெகேமை விட்டு வெளியேறி, இயேசுவையும் அவருடைய தாயையும் எகிப்துக்கு அழைத்துச் சென்றேன். ஒரு காலத்தில் தேவன் தன்னுடைய மக்களை விடுவித்த அந்த இடமாகிய எகிப்து எங்களுடைய மூதாதையர்கள் அடிமைகளாக இருந்த இடமாகும். அது இயேசுவுக்குப் பாதுகாப்பான இடமாக மாறியது எவ்வளவு விசித்திரமானது !.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு, ஏரோது மரித்துவிட்டான் என்று கேள்விப்பட்டோம். வீட்டிற்குத் திரும்புவது பாதுகாப்பானது என்பதால் , நாங்கள் நாசரேத்துக்கு திரும்பி என் தச்சு வேலையை தொடர்ந்தேன்.

என் கதையில் இன்னும் நிறைய இருக்கிறது, ஆனால் இப்போதைக்கு நான் இங்கே நிறுத்த வேண்டும். நான் நிறுத்துவதற்கு முன் இன்னும் ஒரு விஷயம்: இயேசுவின் கன்னிப்பிறப்பை விசுவாசிப்பது கடினம் என்று நீங்கள் நினைத்தால், முதலில் அது எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப்பாருங்கள் ?

என்னைவிட வேறு யாருக்கும் இதை விசுவாசிப்பது மிகவும் கடினமானதாக இருக்கப்போவதில்லை. ஆனால் அவர் ஒரு கன்னிகையால் பிறந்தவர் என்று என்னால் சொல்ல முடியும்.
அது ஏன் முக்கியம் என்றால்: இயேசு ஒரு கன்னிகைக்கு பிறந்ததினால் , இந்த உலகில் வாழ்ந்த எந்த மனிதர்களாலும் செய்யமுடியாதவைகளை அவர் நமக்காக செய்து முடித்தார்.

ஜெபம்

பிதாவே, உம்முடைய குமாரனாகிய இயேசுவை உலகிற்கு அனுப்பியதற்காக உமக்கு நன்றி. அவருடைய பிறப்பைப் பற்றி நீர் எங்களுக்குச் சொன்ன அனைத்தையும் எங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது, ஆனால் அவருடைய மகத்துவத்தையும் மகிமையையும் நாங்கள் சிந்திக்கையில், ஆச்சரியத்தால் நிறைந்து முழங்கால்படியிட்டு உம்மை ஆராதிக்கிறோம் ! ஆமென்.



சிமியோனின் கதை



நான் பெத்லெகேமில் இல்லை. நான் தூதர்களைக் காணவில்லை. மேலும் நான் சத்திரத்திற்கும் செல்லவில்லை. ஆனால், இயேசு பிறந்த நாற்பது நாட்களுக்குப் பிறகு நான் அவரை என் கைகளில் ஏந்தினேன்.

நான் எருசலேமில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதன். சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் மரிப்பதற்குள் மேசியாவைக் காண்பேன் என்று தேவன் எனக்கு வெளிப்படுத்தியிருந்தார்.

அதை விளக்கச் சொல்லி கேட்காதீர்கள். நான் உங்களுக்கு சொல்லக்கூடியவைகள் என்னவென்றால், உலகமே ஆவலோடு எதிர்பார்த்து கொண்டிருந்த மீட்பரைக் காணும்வரை நான் மரிக்கமாட்டேன் என்பதுதான், அதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

ஒரு சுவாரசியமான அனுபவம் எனக்கு கிடைத்தது, அது என்னவெனில் ஒரு எதிர்கால நிகழ்வை காண நான் உயிருடன் இருப்பேன் என்பதே. நான் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த நேரங்கள் இருந்தன. மக்கள் நான் குணமடைவேனா என்று யோசித்ததுண்டு. ஆனால் எனக்கு ஒருபோதும் சந்தேகம் இல்லை. நான் கிறிஸ்துவைக் காண்பேன் என்று தேவன் எனக்கு வாக்குப்பண்ணியிருந்தார். அதனால் அவர் வரும்வரை நான் சாவாமையுள்ளவனாயிருந்தேன்!

நான் அவரைக் கண்டால் எப்படி அறிந்து கொள்வேன் என்று சில சமயங்களில் யோசித்தது உண்டு. ஆனால் எப்படியாவது நான் அறிந்து கொள்வேன் என்று எனக்குத் தெரியும்.

அது நடந்த நாள்

சரி, அது நடந்த நாளைப்பற்றி உங்களுக்குச் சொல்கிறேன். என் முழு வாழ்க்கையுமே அந்த நாளுக்காக தயாரானது போலவே இருந்தது.

விசித்திரமான விஷயம் என்னவென்றால், அது மற்ற நாட்களைப்போலவே ஒரு சாதாரணமான நாளாகும் . நான் என் வழக்கமான வேலையில் ஈடுபட்டிருந்தேன், அப்போது தேவாலயத்துக்குப் போகவேண்டும் என்ற ஒரு உள் உந்துதலை நான் உணர்ந்தேன். தேவன் பொதுவாக என்னுடன் இப்படிப் பேசுவதில்லை, ஆனால் என் மனதில் ஒரு சத்தம், "சிமியோனே, தேவாலயத்துக்குப் போ" என்று சொன்னது போலிருந்தது.

வேலை முடிந்த பிறகு வீட்டிற்குச் செல்லும் வழியில் போகலாம் என்று தான் என் முதல் எண்ணம் இருந்தது, ஆனால் அது கீழ்ப்படியாமை என்பதை நான் அறிந்திருந்தேன். நான் செய்துகொண்டிருந்ததை விட்டு விட்டு, உடனடியாகத் தேவாலயத்துக்குச் செல்ல வேண்டும் என்று நான் அறிந்திருந்தேன்.அதின்படி நான் சென்றதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்!.

பொதுவாக, வியாபாரிகள் மிருகங்களை விற்கும் காட்சி, ஆசாரியர்கள் பலிகளைச் செலுத்துதல், மக்கள் தங்கள் பாவங்களைஅறிக்கையிடுதல் மற்றும் பெற்றோர்கள் தங்கள் முதற்பேறான மகன்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தல் போன்றவற்றால் தேவாலய வளாகம் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும்.

நான் வந்தபோது, ஒரு இளம் தம்பதி தங்கள் குழந்தையுடன் ஆசாரியருக்கு முன் நின்று கொண்டிருந்தார்கள். ஆசாரியருக்கு அவர் யார் என்று தெரியவில்லை. ஆனால் நான் பார்த்தபோது, அவரே மேசியா என்று எனக்குத் தெரியும்.

அது எனக்கு எப்படித் தெரியும் என்று என்னிடம் கேட்காதீர்கள். தேவனுடைய பரிசுத்த ஆவியானவரே இதை எனக்கு வெளிப்படுத்தினார் என்று சொல்வதைத் தவிர வேறு எதையும் என்னால் உங்களுக்குச் சொல்ல முடியாது. என் வாழ்க்கையில் எந்த விஷயத்திலும் நான் இவ்வளவு உறுதியாக இருந்ததில்லை. இந்தக்குழந்தையைத்தான் முழு உலகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

எவரும் தங்கள் சொந்த முயற்சியில் இதைக் கண்டு பிடிக்கவில்லை. தூதர்கள் மேய்ப்பர்களுக்கு சொன்னார்கள், ஞானிகள் ஒரு நட்சத்திரத்தால் வழி நடத்தப்பட்டார்கள், மற்றும் பரிசுத்த ஆவியானவர் அவரை எனக்கு வெளிப்படுத்தினார்.

> என் வாழ்க்கையில் வேறு எந்த விஷயத்திலும் நான் இவ்வளவு உறுதியாக இருந்ததில்லை. இந்தக் குழந்தையே உலகம் முழுவதும் எதிர்பார்த்தவர் ஆவார்

இயேசுவே கிறிஸ்து என்பதற்கான ஆதாரம் அவரைத் தேடும் அனைவருக்கும் இருக்கிறது, ஆனால் சத்தியத்தைக்காண உங்கள் கண்களைத் திறப்பவர் தேவனே.

எனக்கு அருளப்பட்ட வார்த்தைகள்

நான் அந்தக் குடும்பத்திடம் நடந்துசென்று, அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கக் கூடியிருந்த சிறிய கூட்டத்துடன் நின்றேன்.



அப்போதுதான் அது நடந்தது. அந்த நேரத்தில் பேசப்பட வேண்டிய வார்த்தைகளைத் தேவன் எனக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார் என்று நான் அறிந்தேன். எனவே நான் யோசேப்பின் கையை மெதுவாகத் தட்டினேன். நான் சொல்ல எனக்கு வார்த்தைகள் அருளப்பட்டிருப்பதாகவும், குழந்தையை என் கையில் ஏந்தமுடியுமா என்று நான் கேட்டேன்.

"சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, உம்முடைய இரட்சிப்பையே என் கண்கள் கண்டது; இதை சகல ஜனங்களுடைய சமூகத்திலும் ஆயத்தம் பண்ணினீர்."

நான் ஒரு அந்நியன், ஆசாரியன் கூட இல்லை, அதனால் அவர் ஆச்சரியமடைந்தது போல் தோன்றியது, ஆனால் அவர் சம்மதித்தார், நான் அந்தக் குழந்தையை என் கைகளில் ஏந்தினேன்.
பின்னர் வார்த்தைகள் எனக்கு கொடுக்கப்பட்டது . நான் பேசிக்கொண்டிருந்தேன், ஆனால் நான் பேசிய வார்த்தைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன என்று எனக்குத் தெரியும். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு நான் பேசினேன் என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும்.

குழந்தையை என் கைகளில் ஏந்திக்கொண்டு, நான் பிரகடனம் செய்தேன்: "சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, இப்போது உமது அடியேனை உமது வார்த்தையின்படி சமாதானத்தோடே போகவிடுகிறீர்; ஏனென்றால், சகல ஜனங்களுடைய சமூகத்திலும் ஆயத்தம் பண்ணின உமது இரட்சிப்பையே என் கண்கள் கண்டது. இது புறஜாதிகளுக்குப் பிரகாசமுண்டாக்குகிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் இருக்கும்."

நான் குழந்தையை மரியாளிடம் திருப்பிக் கொடுக்கவிருந்தேன், ஆனால் மேலும் தெய்விக வார்த்தைகள் எனக்குள் வந்தன. ஒரு காற்று என் சரீரத்திற்குள் வீசுவதைப்போல, இந்த வார்த்தைகள் எனக்குள் பாரமாக இருந்தது, நான் அவற்றைப் பேச வேண்டியிருந்தது.

"இதோ, இவர் இஸ்ரவேலில் அநேகர் விழுகைக்கும் எழுச்சிக்கும் ஏதுவாக..." இருப்பார் என்ற வார்த்தைகள் எனக்கு விசித்திரமாகத் தோன்றின. 'எழுச்சி' என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது, ஆனால் 'வீழ்ச்சி ' ஏன் ?

வார்த்தைகள் வந்து கொண்டேயிருந்தன. "...விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்; அதினால் அநேகருடைய இருதயத்திலுள்ள சிந்தனைகள் வெளியரங்கமாக்கப்படும்." நான் பேசும் வார்த்தைகளை என்னால் நம்பவே முடியவில்லை. வாக்குப்பண்ணப்பட்ட இந்தக் குழந்தைக்கு விரோதமாக எப்படி பேச முடியும்?

நான் மரியாளைப் பார்த்தேன். அவளுடைய ஆழமான ஆத்துமாவிலிருந்து வெளிப்பட்ட ஒரு அழகு அவளுடைய கண்களில் இருந்தது. அவளை நான் பார்க்கையில், என் உள்ளுணர்வு சொல்லிற்று : "உம்முடைய ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்."

நாங்கள் அனைவரும் ஒரே இடத்தில் உறைந்துபோய் நின்றோம்.

இதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்?



அன்னாளிடம்அருளப்பட்ட வார்த்தைகள்

அந்த சமயத்தில் , ஒரு வயதான பெண்மணி அங்கு வந்தார். அவள் பெயர் அன்னாள், அவள் ஒரு ஜெபவீராங்கனை. உபவாசம், ஜெபம் , ஆராதனை ஆகியவற்றில் தன்னை அர்ப்பணித்திருந்தாள். தேவாலயத்திற்குத் செல்கின்றவர்கள், அவளை தேவாலய வளாகத்தில் தவறாமல் காணலாம் என்று அறிவார்கள்!.

மரியாளுடைய ஆத்துமாவுக்கு வரவிருக்கும் வலியைப் பற்றி நான் பேசி முடித்தபோது, அன்னாள் வந்து, தேவனைத் துதிக்க ஆரம்பித்தாள். அது மிகவும் விசித்திரமான விஷயமாகும் . இயேசுவுக்கு விரோதமாய் அநேகர் எழும்புவார்கள் என்றும், மரியாளின் ஆத்துமா எவ்வளவு வேதனைப்படும் என்றும் நான் கூறியதை புரிந்துகொள்ள முயன்று கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் தேவன் அன்னாளுக்கு துதி மற்றும் ஸ்தோத்திரத்தின் வார்த்தைகளைக் கொடுத்தார்.

குழந்தைக்கு விரோதமாய்ப் பேசப்பட்டால், மரியாளின் ஆத்துமா உருவப்பட்டால், தேவன் ஏன் அன்னாளுக்கு ஸ்தோத்திர வார்த்தைகளைக் கொடுக்க வேண்டும்?

நான் இப்போது புரிந்துகொண்டதை அவள் அப்பொழுதே கிரகித்திருப்பாள் என்று நினைக்கிறேன். விவரிக்கமுடியாத வலியின் மூலம் இயேசு நம்மை விடுவிப்பார்.

நம்முடைய மீறுதல்களுக்காகத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர், காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களுக்காக நொறுக்கப்படுவார் என்றும், அவர் அனுபவிக்கும் தண்டனை நமக்கு சமாதானத்தைக் கொண்டு வரும் என்றும் சொல்லப்பட்ட, ஒரு பழைய தீர்க்கதரிசனம் என் நினைவுக்கு வந்தது.

நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை

நான் கடைசியாக உங்களுக்கு சொல்ல விரும்பிய விஷயம் இதுதான். நான் அவரை என் கைகளில் ஏந்தினபோது சமாதானத்தோடே மரிக்கலாம் என்று உணர்ந்தேன்.

கிறிஸ்துவானவர் என்ன செய்வார் என்பதைப்பற்றி மக்களுக்கு பலவித நம்பிக்கைகளும் கனவுகளும் இருந்தன, ஆனால் அதில் எது மிகப்பெரியது என்பதில் என் மனதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை.

அவர் தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் மரணத்தைப் பாதுகாப்பானதாக்கினார். அவர் அதை வலியற்றதாக்கினார் அல்லது விரும்பத்தக்கதாக்கினார் என்று நான் சொல்லவில்லை. அது இன்னமும் நம்முடைய பெரிய சத்துருதான், ஆனால் அவர் அதை பாதுகாப்பானதாக்கினார்.

அவர் தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் மரணத்தைப் பாதுகாப்பானதாக மாற்றினார்.

என் மரணம் இந்த பழைய, சோர்வுற்ற சரீரத்திலிருந்து ஒரு விடுதலையாக இருக்கும் என்று நான் அறிந்தேன். அதுதான் சிறிது காலத்திற்குப் பிறகு நடந்தது.

நான் மரித்தபோது நித்தியத்திற்குள் பிரவேசித்தேன். அதாவது மயக்கமடைந்து விழித்திருப்பது போல உணர்ந்தேன். நான் எவ்வளவு காலம் அங்கே இருந்தேன் என்று எனக்குத் தெரியாது, நித்தியத்தில் நேரம் வேறு விதத்தில் இருக்கும் . ஆனால் என்னுடைய முடிவை நான் நன்கு அறிந்திருந்தேன். அந்த நாளை எப்படி மறக்க முடியும் .



திடீரென்று எல்லாம் அசைந்தது. நாங்கள் இயேசுவைக் கண்டோம். அவர், "இங்கே வாருங்கள்," என்றுசொன்னார், உடனடியாக நாங்கள் பயமின்றி, பெருமகிழ்ச்சியுடன் தேவனுடைய சந்நிதிக்குள் பிரவேசித்து, அவருடன் இருப்பதைக் கண்டோம்.

> குருடர்கள் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், மரித்தோர் எழுப்பப்பட்டார்கள், ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

உங்களுக்கான நற்செய்தி என்னவென்றால், நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் மரிக்கும்போது உங்கள் ஆத்துமா உடனடியாக கர்த்தருடைய சந்நிதிக்குச் செல்லும். சரீரத்தை விட்டு நம் ஆத்துமா விலகி இருப்பது தேவனோடு தங்குவதற்கான உன்னத வாய்ப்பு , அதுவே மிகச்சிறந்த அனுபவம்.

நான் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கே இருக்கிறேன், அதை ஒருவரும் கணக்கிட்டு பார்த்ததில்லை. மேலும் என் தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறியது என்பதையும் நான் கண்டறிந்தேன்.

முப்பதாவது வயதில் இயேசு தம்முடைய ஊழியத்தைத் தொடங்கினார். தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்பட்டது– குருடர்கள் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், மரித்தோர் எழுப்பப்பட்டார்கள், ஏழைகளுக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

ஆனால் பரிசுத்த ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தியபடி, மக்கள் அவருக்கு எதிராக எழுந்தார்கள், அவருக்கு விரோதமாகச் சதி செய்தார்கள், கடைசியில் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இயேசு மரித்தார், ஆனால் மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்தார். அவர் என்றென்றும் ஜீவிக்கிறார், மேலும் அவரை விசுவாசிக்கிற அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார்.

அவருடைய வருகை, உண்மையில் அநேகருடைய வீழ்ச்சிக்கும், உயிர்மீட்சிக்கும் ஏதுவாக அமைந்தது. இந்த உலகில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதரும், அவர் நிமித்தம் வீழ்வார்கள் அல்லது எழுவார்கள் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அவர் ஒரு பெரிய கல்லுக்கு ஒப்பானவர். அவிசுவாசத்துடன் அவர் மீது இடறினால், அவர் உங்களைக் கீழே தள்ளுவார். ஆனால் நீங்கள் விசுவாசத்துடன் அவரை பற்றிக்கொள்ளும்போது , அவர் உங்களை உயர்த்துவார்.

ஜெபம்

பிதாவே, இயேசு சிலுவையில் பட்டபாடுகளின் மூலமாக எங்கள் பாவங்களிலிருந்து எங்களை விடுவித்ததற்காக உமக்கு நன்றி.

ஒவ்வொரு மனிதரின் வீழ்ச்சிக்காகவோஅல்லது உயிர்மீட்சிக்காகவோ நீர் அவரை உலகிற்கு அனுப்பினீர்.

விசுவாசத்தினாலே நாங்கள் அவரைப் பற்றிக்கொண்டு உயர்த்தப்பட எங்களுக்கு உதவி செய்யும்! ஆமென்.



ஏரோதின் கதை



வரலாற்றிலேயே மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்ட தலைவனாக இருக்கக்கூடும் என்று நான் அடிக்கடி உணர்கிறேன், அப்படியே அநேகர் என்னை குறித்து நினைத்தனர். என்னுடைய வாழ்க்கையின் மாபெரும் சாதனைகள் பற்றி பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. இது எனக்கு பிரமிப்பாக தோன்றுகிறது. நான் செய்த பலகாரியங்கள் இன்று மிகச் சிறியதாகக் கருதப்படுவது எப்படி?.

நான் ஆட்சிக்கு வந்தவிதம் எப்படி

என்னைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன் . என் காலத்தில் "ஏரோது" என்பது ஒரு பொதுவான பெயர்தான், ஆனால் நான் "மகா ஏரோது" என்று அழைக்கப்பட்டேன், அந்த பட்டத்திற்கு நான் தகுதியானவன்தான்.

யூதர்களின் நாடு பல ஆண்டுகளாகப் போர்கள், படுகொலைகள், பகைகள் என – முழுவதுமாக ஒரு குழப்பமாக இருந்தது. பின்னர் ரோமப் பேரரசு எழுந்தது. ரோமர்கள் நிலைத்தன்மையை விரும்பினார்கள், அது எனக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது.

அகஸ்து சீசர் என்னை யூதேயா மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள முழுப்பகுதிக்கும் பொறுப்பாளராக நியமித்தார்.

நான் யூதர்களின் ராஜாவாக இருந்தேன். நான் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்தேன், அந்தக் காலம் முழுவதும் நாட்டில் சமாதானமும் நிலைத்தன்மையும் இருந்தது.

அமைதியான சூழ்நிலையை நிலைநாட்ட சிறிது காலம் எடுத்தது. நான் முதலில் செய்ய வேண்டியது மதத் தலைவர்களுக்கு இடையே இருந்த சண்டையைச் சரி செய்வதுதான். பெரும்பாலும் மதத் தீவிரவாதிகளால் தான் தொந்தரவுகள்ஆரம்பிக்கின்றன என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

நான் என்ன செய்தேன் என்றால்: ஆலோசனை சங்கம் என்று அழைக்கப்பட்ட ஓர் ஆளும் குழுவில் 72 ஆசாரியர்கள் இருந்தார்கள். நான் அவர்களில் 45 பேரை அகற்றினேன், அது மற்றவர்கள் தங்கள் வேலையில் கவனம் செலுத்த உதவியது.

என் வாழ்வின் சாதனைகள்

என் தலைமையின் கீழ் எருசலேம் நகரம் மாற்றியமைக்கப்பட்டது. எனக்குக் கட்டிடக்கலை மிகவும் பிடித்திருந்தது, மேலும் நான் பெரிய அளவில் கட்ட விரும்பினேன்.



தேவாலயம்தான் எருசலேமில் உள்ள மிக முக்கியமான கட்டிடம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முதலில் இருந்த தேவாலயம் கம்பீரமாக இருந்தது, ஆனால் என் காலத்தில் இருந்த தேவாலயம் சற்றுப்பொலிவிழந்தது போல் காட்சியளித்தது. எனவே நான் அதை மீண்டும் மாபெரும் தேவாலயமாக மாற்றவேண்டும் என்று தீர்மானித்தேன். அது ஏரோதின் தேவாலயம் என்று அறியப்படும். அது மக்களின் இதயங்களைக் கவர்வதுடன், உலகின் சிறந்த அதிசயங்களில் ஒன்றாகவும் அது நிலைத்திருக்கும்.

என் ஆட்சியின் போது, வேறு எந்த ராஜாவையும்விட நான் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அதிக கட்டிடங்களைக் கட்டினேன். என் முன்னோடிகளை விட அதிக ச மாதானத்தையும் நிலைத்தன்மையையும் நான் கொண்டு வந்ததால், நான் "மகா ஏரோது" என்று அறியப்பட்டேன்.

என் சாதனைகள் அனைத்தையும் வைத்துப்பார்த்தால், நான் வரலாற்றில் மிகவும் பாராட்டப்பட்ட ராஜாவாக இருப்பேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நடந்தது என்னவென்றால், எனக்குத் தகுதியான அங்கீகாரம் ஒருபோதும் கிடைக்கவில்லை.

அதற்குப் பெரும்பாலும் காரணம் என்னுடைய பின்னணியம் தான். நான் ஒரு ஏதோமியன், இனத்தால் அரேபியன், மதத்தால் யூதன், அனுதாபத்தால் ரோமன். நான் எல்லாராலும் அஞ்சப்பட்டேன் ஆனால், யாராலும் நேசிக்கப்படவில்லை.

இயேசு பிறந்த கதை

எருசலேம் ஒரு பெரிய நகரம், சரியான தகவல்களை பெற்றுக்கொள்வது என்பது ஒரு மாபெரும் பொக்கிஷம், தகவல்கள் என்னிடம் வந்தடைய பலவழிகளை நான் ஏற்படுத்தினேன்.

இயேசுவின் பிறப்பைப் பற்றி நான் முதலில் அறிந்து கொண்டது, சில அந்நிய நாட்டு ராஜாக்கள் எருசலேமுக்கு வந்து, அவர்கள் ஒரு நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து வந்ததாகவும், யூதர்களின் ராஜாவாகிய ஒரு குழந்தையைத் தேடுவதாகவும் சொன்னபோது தான்.



நான் ஒருவன் மட்டுமே ராஜாவாக இருக்க முடியும். போட்டியான ஒரு ராஜாவைப் பற்றிய செய்தியை நான் சாதாரணமாக எடுத்துக்கொள்ளவில்லை. நான் மட்டும் அப்படியிருக்கவில்லை. எங்கள் வரலாற்றில் தங்களைத் தாங்களே "மேசியாக்கள்" என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, ஒரு கூட்டத்தை சேர்த்துக்கொண்டு பல தொந்தரவுகள் ஏற்படுத்தியவர்கள் நிறைந்திருந்தார்கள். எருசலேமில் உள்ள யாரும் மீண்டும் அந்த நிலைக்குச் செல்ல விரும்பவில்லை.

ஒரு பெரிய பிரச்சனை வரப்போகிறது என்பதை நான் காணமுடிந்தது, அதை நான் உறுதியுடன் சமாளிக்கத் தீர்மானித்தேன். நான் முதலில் செய்தகாரியம் என்னவென்றால், பிரதான ஆசாரியர்களையும் வேதப்போதகர்களையும் ஒன்றாக அழைத்தது தான். "மேசியா எங்கே பிறப்பார்?" என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

"யூதேயாவிலுள்ள பெத்லெகேமில்," என்று அவர்கள் சொன்னார்கள். பின்னர் அவர்கள் வேதாகமத்திலிருந்து அதிகாரத்தையும் வசனத்தையும் கொடுத்தார்கள். மீகா தீர்க்கதரிசி 800 ஆண்டுகளுக்கு முன்பே இதைப் பற்றிக் கூறியிருந்தாராம்: “யூதா தேசத்திலுள்ள பெத்லெகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்.”



என்னுடைய முயற்சியினால் இடத்தை கண்டுபிடித்தேன். அடுத்தகேள்வி, எந்த வருடத்தில் இந்த ராஜா பிறப்பார் என்பது. இதை அறிந்துகொள்ள நான் அந்நிய ராஜாக்களை அரண்மனைக்கு அழைத்தேன், ஒரு ராஜகுழந்தை பிறந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டதாக அவர்களிடம் கூறினேன் . மேலும் “மேசியா பிறந்திருந்தால், நானும் அவரைக் பனிந்து ஆராதிக்க விரும்புகிறேன்” என்றேன் .

“ஒரு வேளை மேசியா வந்திருந்தால், அவருக்குச் சத்துருக்கள் இருப்பார்கள். நான் அவரைக் காப்பாற்ற முடியும். ஆகவே அவருடைய சத்துருக்கள்அவரைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே நான் அவரைக் கண்டுபிடிக்க வேண்டும்."என்று கூறினேன்.

அந்த ராஜாக்களிடம் குழந்தையைத் தேடிக் கண்டுபிடித்தவுடன் எனக்குத் தெரிவிக்குமாறு சொன்னேன். பின்னர், அவர்கள் புறப்படும்போது, "நீங்கள் பார்த்த அந்த நட்சத்திரம் முதன் முதலில் எப்பொழுது தோன்றியது?" என்று கேட்டேன்.

"நாங்கள் அதை முதன் முதலில் பார்த்து ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் ஆகிறது" என்று அவர்கள் சொன்னார்கள். அதன்பின்பு அவர்கள் போய்விட்டார்கள், ஆனால் எனக்கு தேவைப்பட்ட தகவலை கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

இரண்டு ஆண்டுகள்! இப்போது எனக்கு பிறந்த இடமும் காலமும் கிடைத்துவிட்டது. பெத்லெகேம் நகரத்தில் இரண்டு வயதிற்குட்பட்ட ஓர் ஆண் குழந்தையை நாங்கள் தேடிக் கொண்டிருந்தோம்.

ராஜாக்கள் மீண்டும் வந்து எனக்குத் தகவல் தெரிவிப்பார்கள் என்று நான் காத்திருந்தேன், ஆனால் அவர்கள் ஒருபோதும் திரும்பவில்லை. நான் ஏமாற்றப்பட்டேன் , அது என்னைக் கோபப்படுத்தியது. அதனால் பெத்லெகேமில் இரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று ஒரு மதிப்பீட்டைக் கேட்டேன்.

அது ஒரு சிறிய நகரம், சுமார் பன்னிரண்டு, அதிகபட்சம் இருபது அல்லது முப்பது சிறுவர்கள் மட்டுமே இருக்க வாய்ப்புள்ளன என்று எனக்கு கூறப்பட்டது.

நான் என் அதிகாரிகளை அழைத்தேன், அங்கே தேசியப் பாதுகாப்புக்கு ஒரு அச்சுறுத்தல் இருப்பதாகவும், பெத்லெகேமில் இரண்டு வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை இருப்பதாகவும் சொன்னேன். அவர்கள் என்னை நம்பமுடியாமல் பார்த்தார்கள். ஆனால் பிரச்சினையைச் சமாளிக்க அவர்களை அனுப்பி வைத்தேன், அவர்களும் தங்கள் வழக்கமான செயல்திறனுடன் அதைச் செய்துமுடித்தார்கள் .

அந்த நிகழ்வுக்கு பின்னர் சில காலத்திலே நான் மரித்துவிட்டேன். அது நடந்து 2,000 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது, அதனால் சிந்திக்க எனக்கு நிறைய நேரம் கிடைத்தது.



எனக்கு ஒரு சில தகவல்கள் கிடைத்தது , அது அந்தக் குழந்தை அவருடைய பெற்றோர்களால் எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்று என்னிடம் சொல்லப்பட்டது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஒரு பொது ஊழியத்தைத் தொடங்கினார் என்றும், நான் முன்னதாகச் செய்ய முயன்றதை என் ஆட்களும், பரிசேயர்களும் இணைந்து செய்து முடித்தார்கள் என்றும் கேள்விப்பட்டேன்.
கடைசியில் , அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்று என்னிடம் சொல்லப்பட்டது. அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று ஒரு வதந்தி நிலவுகிறது, இங்கேயிருக்கும் யாரும் அதை நம்புவதில்லை.

உண்மையான மகத்துவம்

அவர் பிறப்பதற்கு முன்பு, ஒரு தூதன் அவருடைய தாயாருக்குத் தோன்றி, "அவர் பெரியவராயிருப்பார்" என்று சொன்னதாக யாரோ என்னிடம் சொன்னார்கள். அந்தச்செய்தி என்னைத் தொந்தரவு செய்கிறது, ஏனென்றால் அதுதான் என்னுடைய வாழ்வின் நோக்கமாக இருக்கவேண்டும் என்று நான் நினைத்தேன். உங்களுக்குத் தெரியுமே, "மகா ஏரோது!"

நான் சாதித்த எதையும் யாரும் பெரியதாக நினைக்கவில்லை என்பது எனக்குப் பெரும் மன உளைச்சலை அளிக்கிறது. தேவாலயத்திற்கான வேலை முடிவதற்கு முன்பே நான் இறந்துவிட்டேன், அது கட்டி முடிக்கப்பட்ட சிறிது காலத்திலேயே, ரோமர்கள் அதைத் தரைமட்டமாக்கினார்கள். அவர்கள் ஒரு கல்லைக்கூட மற்றொன்றின் மேல் வைக்கவில்லை. என் சாதனையும் நிலைக்கவில்லை.

இயேசுவுக்கு எதிரான நான் செய்த எனது செயலுக்காகவே நான் இன்றும் நினைக்கப்படுகிறேன். இன்றும் கோபம், விரக்தி, வருத்தத்துடன் என் பாவங்களுக்கான குற்றவுணர்வுடன் வாழ்கிறேன். இந்த விஷயங்கள் ஒவ்வொரு நாளும் என்னை ஆட்கொள்கின்றன, அதிலிருந்து எனக்கு எந்த விடுதலையும் கிடைக்கவில்லை.

அதேசமயம், பெத்லெகேமில் நான் கொன்ற எல்லாச் சிறுவர்களும் இப்போது இயேசுவுடன் பரலோகத்தில் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய வாழ்க்கையின் நோக்கங்கள் அங்கே நிறைவேற்றப்படுகிறது என்றும் என்னிடம் சொல்லப்பட்டது.

பரலோகம் ஏராளமான மக்களால் நிரம்பியுள்ளது என்றும், இன்னும் பலர் பரலோகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் கேள்விப்பட்டேன். ஆனால் நான் அவர்களில் ஒருவனாக இருக்க வாய்ப்பு இல்லை. நான் ஒரு பெரிய வீட்டிற்கு வெளியே மழையில் நின்று, உள்ளே விருந்தாளிகள் மகிழ்ச்சியில் இருப்பதைக் கண்ணாடி வழியாகப் பார்ப்பவனைப்போல இருக்கிறேன்.

முன்னொரு காலத்தில் நான் இயேசுவை வரவேற்று, ஞானிகளுடன் அவரை ஆராதித்திருக்க முடியும், ஆனால் நான் வேறு ஒரு செயலை செய்தேன். இயேசுவை உலகிலிருந்து அகற்ற முயற்சிப்பதன் மூலம், நான் தேவனுக்கெதிராகப் போராடினேன் என்பதை இப்பொழுது நினைத்து பார்க்கிறேன். நான் இன்னமும் போராடிக்கொண்டிருக்கிறேன், இப்பொழுது என்னால் அந்த போராட்டத்தில் இருந்து வெளியே வர முடியவில்லை . இதுதான் என்னுடைய கதை. எனக்கு இப்போது மிகவும் காலதாமதமாகிவிட்டது.



ஜெபம்

இயேசுவே ராஜாவென்ற நல்ல செய்திக்காக பிதாவே உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

உம்மை நான் ராஜாவாக தாமதிக்காமல் விசுவாசிக்க தந்த தருணத்திற்காக நன்றி.

என் வாழ்நாள் முழுவதும், என்றென்றும், அவரது ராஜ்யத்தின் ஆசிர்வாதங்களினால் வாழும்படி எனக்கு உதவி செய்யும். ஆமென்!

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

யோவான் 1:9-14



For more books by
10Publishing, visit:

10ofthose.com

For more info about
Open The Bible, visit (US):

openthebible.org

Visit (UK):

openthebible.org.uk

